**மார்ச் – 19**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு சட்டமன்ற சபாநாயகர் பதவியில் இருந்து M. அப்பாவுவை நீக்கக் கோரி அ.தி.மு.க. கட்சியினால் அவையில் முன் வைக்கப்பட்ட ஒரு தீர்மானத்திற்கு எதிராக 154 வாக்குகளும், ஆதரவாக 63 வாக்குகளும் கிடைத்து, 91 வாக்குகள் வித்தியாசத்தில் அது தோல்வியுற்றது.
- ஜனவரி மற்றும் ஏப்ரல் ஆகிய மாதங்களுக்கு இடையில் தனுஷ்கோடிக்கு அருகிலுள்ள இராமேஸ்வரம் தீவில் வலசை போதலின்போது இடைநிற்கும் செந்நாரைகளுக்காக (ஃபிளமிங்கோ) என சரணாலயத்தினை அமைக்க தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையில் முன்மொழியப்பட்டுள்ளது.
- மும்பை இந்தியன்ஸ் அணியானது, டெல்லி கேபிடல்ஸ் அணியினை வீழ்த்தியதை அடுத்து, மூன்று போட்டித் தொடர்களில் இரண்டாவது மகளிர் பிரீமியர் லீக் பட்டத்தை வென்றது.
- நீர் வளப் பயன்பாட்டுத் திறன் வாரியத்தினால் (BWUE) ஏற்பாடு செய்யப்பட்ட 2025 ஆம் ஆண்டு நீர் வள நிலைத்தன்மை மாநாடானது புது டெல்லியில் நடைபெற்றது.
- ஃபிட் இந்தியா கார்னிவல் எனப்படும் மூன்று நாட்கள் அளவிலான முதலாவது உடற் பயிற்சி மற்றும் நல்வாழ்வு நிகழ்ச்சியானது புது டெல்லியில் நடைபெற்றது.
- ஹிலால் அகமது, முகமது சஞ்சீர் ஆலம் மற்றும் நஜிமா பர்வீன் ஆகியோரால் எழுதப் பட்டு கடந்த மாதம் வெளியான 'Rethinking Affirmative Action for Muslims in Contemporary India' என்ற ஒரு அறிக்கையானது, கடந்த 10 ஆண்டுகளில் வெளியான இது போன்ற முதல் விரிவான கொள்கை சார் ஆவணமாகும்.
- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது, நெதர்லாந்தில் உள்ள டெல்ஃப்ட் தொழில் நுட்பக் கல்விப் பல்கலைக் கழகத்தில் உள்ள எண்ணிம நெறிமுறைகள் மையத்தினை சுகாதார நிர்வாகத்திற்கான செயற்கை நுண்ணறிவு (AI) குறித்த WHO ஒத்துழைப்பு மையமாக நியமித்துள்ளது.
- மிகப் புகழ்பெற்ற ஒடியா கவிஞரும் முன்னாள் அரசு அதிகாரியுமான இராமகாந்த ராத் சமீபத்தில் காலமானார்.
- மேவாரின் முன்னாள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவரும் HRH என்ற தங்கும் விடுதிகள் குழுமத்தின் தலைவருமான அரவிந்த் சிங் மேவார் சமீபத்தில் காலமானார்.
- உத்தரப் பிரதேசத்தில் உள்ள பிலிபிட் புலிகள் சரணாலயம் (PTR) ஆனது, நேபாளத்தைச் சேர்ந்த காண்டாமிருகங்களுக்கான புதிய சரணாலயமாக மாற உள்ளது.
- இந்தி மொழிக் கவிஞர் ககன் கில் மற்றும் ஆங்கில மொழியில் எழுதும் நாகா மொழி எழுத்தாளர் ஈஸ்டரின் கைர் 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பு மிக்க சாகித்ய அகாடமி விருதைப் பெற்றுள்ளனர்.
  - திரு. கில் "Main Jab Tak Aai Bahar" எனும் தனது கவிதைப் புத்தகத்திற்கும், திருமதி. கைர் "Spirit Nights" எனும் தனது புதினத்திற்கும் விருதைப் பெற்றுள்ளனர்.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## ETPS விரிவாக்கத் திட்டம்

- தமிழ்நாடு மின் உற்பத்திக் கழகம் (TNPGCL) ஆனது, 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் அனல் மின் நிலைய (ETPS) விரிவாக்கத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு

முடிவு செய்துள்ளது.

- முன்னதாக, இந்தத் திட்டத்தினைப் பொது தனியார் கூட்டாண்மை (PPP) மூலமாக செயல்படுத்த முன்மொழியப்பட்டது.
- TNPGCL கழகத்தின் அனல் மின் உற்பத்தி திறன் ஆனது 4,320 மெகாவாட் ஆகும்.
- மத்திய மின் உற்பத்தி நிலையங்கள் (CGS) மற்றும் பிற ஒப்பந்தங்களிலிருந்து நமது மாநிலத்தின் பங்கையும் சேர்த்து, தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தித் திறன் 15,839.56 மெகாவாட் ஆகும்.




# தேசியச் செய்திகள்

## NREGA திட்டம் தொடர்பான பாராளுமன்ற நிலைக்குழு

- மிக அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவினத்தினைக் கருத்தில் கொண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் (MGNREGS) கீழ் ஊதியங்களை திருத்தியமைக்கப் பரிந்துரைத்துள்ளது.
- காங்கிரஸ் கட்சியினைச் சேர்ந்தப் பாராளுமன்ற உறுப்பினர் சப்தகிரி சங்கர் உலகா தலைமையிலான கிராமப்புற மேம்பாட்டுக்கான பாராளுமன்ற நிலைக் குழுவானது நாடு முழுவதும் ஒரே மாதிரியான ஊதிய விகிதங்களை நிர்ணயிக்கக் கோரியுள்ளது.
- தற்போது, நாகாலாந்து மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தில் ஒரு நாளைக்கு சுமார் 234 ரூபாய் என்ற வீதம் முதல் ஹரியானா மற்றும் சிக்கிம் ஆகிய சில மாநிலங்களில் 374 ரூபாய் என்ற அளவிலும் ஊதிய வழங்கீடு வேறுபடுகிறது.
- இந்தக் குழுவின் அறிக்கையின்படி, பிப்ரவரி 15 ஆம் தேதி வரை, நிலுவையில் உள்ள மொத்தத் தொகை 23,446.27 கோடி ரூபாயாக இருந்தன, இதில் 12,219.18 கோடி ரூபாய் ஊதிய நிலுவைத் தொகையும் அடங்கும்.
- மேற்கு வங்காளம் ஆனது 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து MGNREGA திட்ட நடவடிக்கைகளுக்கான நிதியினைப் பெறவில்லை.
- 2005 ஆம் ஆண்டு MGNREGA சட்டத்தின் 27வது பிரிவினைச் செயல்படுத்தி, மத்திய

அரசானது அந்த நிதியை முடக்கியுள்ளது.

❖ இந்தப் பிரிவு ஆனது, இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதில் விதிகளை மீறினால் நிதி வழங்கீட்டினை நிறுத்த அனுமதிக்கிறது.


**HIGHEST HIKE IN...**

| State/UT | FY2023-24 | FY2024-25 | Increase |
|---|---|---|---|
| Goa | ₹322 | ₹356 | 10.56% |
| Karnataka | ₹316 | ₹349 | 10.44% |
| Andhra Pradesh | ₹272 | ₹300 | 10.29% |
| Telangana | ₹272 | ₹300 | 10.29% |
| Chhattisgarh | ₹221 | ₹243 | 9.95% |

**LOWEST HIKE IN...**

| State/UT | FY2023-24 | FY2024-25 | Increase |
|---|---|---|---|
| Rajasthan | ₹255 | ₹266 | 4.31% |
| Kerala | ₹333 | ₹346 | 3.90% |
| Lakshadweep | ₹304 | ₹315 | 3.62% |
| Uttar Pradesh | ₹230 | ₹237 | 3.04% |
| Uttarakhand | ₹230 | ₹237 | 3.04% |

## இந்தியாவின் யுனெஸ்கோ தற்காலிகப் பட்டியல் 2025




❖ தற்போது ஆறு இந்தியத் தளங்களானது, யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரிய மையத்தினால் இந்தியத் தற்காலிகப் பாரம்பரியத் தளங்களின் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளன.


❖ இதில் தெலுங்கானா மாநிலத்தில் உள்ள முதுமால் பெருங்கற்கால நெடுங்கற்கள் மற்றும் மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள பண்டேலாக்களின் அரண்மனைக் கோட்டைகள் அடங்கும்.

❖ இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள பிற தளங்களில் சத்தீஸ்கரில் உள்ள கங்கர் பள்ளத்தாக்கு தேசியப் பூங்கா, பல்வேறு மாநிலங்களில் மௌரிய வழித்தடங்களில் உள்ள அசோகரின் கல்வெட்டுத் தளங்கள், பல்வேறு மாநிலங்களில் உள்ள சௌசத் யோகினி என்ற கோயில்கள் மற்றும் வட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள

குப்தர் கோயில்கள் ஆகியவை அடங்கும்.

- இவற்றுடன், தற்போது தற்காலிகப் பட்டியலில் மொத்தம் 62 இந்தியத் தளங்கள் இடம் பெற்று உள்ளன.
- தற்போது, இந்தியாவில் இருந்து மொத்தம் 43 தளங்கள் யுனெஸ்கோ அமைப்பின் இந்த உலகப் பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இதில் 'கலாச்சார' பிரிவில் 35 தளங்களும், 'இயற்கை' பிரிவில் ஏழு தளங்களும் மற்றும் 'கலப்பு' பிரிவில் ஒரு தளமும் அடங்கும்.

## இந்திய இரயில்வே நிர்வாகத்தின் சரக்குப் போக்குவரத்து 2024-25




- இந்திய இரயில்வே நிர்வாகத்தின் சரக்குப் போக்குவரத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது பதிவாகியுள்ளது என்பதோடு 2024-25 ஆம் நிதியாண்டின் முதல் 11 மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட மொத்த சரக்குப் போக்குவரத்தானது சுமார் 1,465.371 மில்லியன் டன்களை (MT) எட்டியுள்ளது.
- இந்த எண்ணிக்கையானது, ஏற்கனவே 2023-24 ஆம் ஆண்டில் பதிவான 1,443.166 MT என்ற முழு ஆண்டு சரக்குப் போக்குவரத்து அளவினை விஞ்சியுள்ளது.
- இந்தத் தேசிய அளவிலான நிறுவனம் ஆனது, 2027 ஆம் ஆண்டிற்குள் 3,000 MT என்ற சரக்குப் போக்குவரத்து இலக்கினை அடைய வேண்டும் என்ற இலட்சிய மிகு இலக்கை நிர்ணயித்துள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## குறைந்தபட்ச உணவுப் பன்முகத்தன்மை குறிகாட்டி

- குறைந்தபட்ச உணவுப் பன்முகத்தன்மை (MDD) குறித்த புதிய குறிகாட்டியை ஐக்கிய நாடுகளின் புள்ளி விவர ஆணையம் ஏற்றுள்ளது.
- இந்தக் குறிகாட்டியானது 2030 ஆம் ஆண்டு செயல்பாட்டு நிரலின் கீழ் உள்ள அதன் 17 இலக்குகளில் ஒன்றான பட்டினி நிலையின்மை குறித்த 2வது நிலையான மேம்பாட்டு இலக்கினை நோக்கிய முன்னேற்றத்தைக் கண்காணிக்க உதவும்.
- MDD என்பது நாம் உட்கொள்ளும் உணவுகளின் வகையைக் குறிக்கிறது மற்றும் நமது


உணவின் தரம் ஆரோக்கியம், வளர்ச்சி, மேம்பாடு மற்றும் நல்வாழ்வுக்கு மிகவும் அவசியமானது என்பதால் இது முக்கியமானதாகும்.

- MDD என்பது கடந்த 24 மணி நேரத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகள், வரையறுக்கப் பட்ட 10 உணவுக் குழுக்களில் குறைந்தது ஒரு ஐந்து உணவு வகைகளை உட்கொண்டு இருக்கிறார்களா என்பதற்கு ஆம்/இல்லை என ஒரு பதிலை வழங்கும் வகையிலான ஒரு குறிகாட்டியாகும்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சுடரொளியற்ற சூரிய வெப்ப உமிழ்வு 2025




- சூரிய வளிமண்டலத்திலிருந்து ஒரு சுடரொளியற்ற சூரிய வெப்ப உமிழ்வு (CME) பற்றிக் கண்டறிந்துள்ளதாக அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

- ஆதித்யா-L1 கலத்தில் உள்ள சூரியனின் கட்புலனாகும் ஒரு பகுதியின் வெப்ப உமிழ்வு கரொனா அடுக்கு ஆய்வுக் (VELC) கருவியின் உதவியுடன் இது கண்டறியப்பட்டது.
- சுடரொளி மற்றும் சூரிய வெப்ப உமிழ்வுகள் சூரியனில் நிகழும் வெடிப்பு நிகழ்வுகள் ஆகும்.
- அங்கு காந்தப்புலக் கோடுகள் மறுசீரமைக்கப்படும் போது காந்த மறு இணைப்பு காரணமாக அவை ஏற்படுகின்றன.
- ஒரு சுடரொளி தோற்ற நிகழ்வின் போது, ஆற்றல் ஆனது முதன்மையாக வெப்பமான பிளாஸ்மாவிலிருந்து மின்காந்த கதிர்வீச்சாக வெளியிடப்படுகிறது.
- சுடரொளி தோற்ற நிகழ்வுடன் ஒப்பிடும் போது, CME நிகழ்வுகள் என்பது வினாடிக்கு 3,000 கிலோ மீட்டர் வேகத்தில் பயணிக்கும் சுமார் டிரில்லியன் கிலோகிராம் எடை உள்ள பிளாஸ்மா மற்றும் காந்தப்புலத்தின் மாபெரும் வெடிப்புகள் ஆகும்.

## ஒளியின் மீத்திட நிலை




- ஆராய்ச்சியாளர்கள், முதன்முறையாக ஒளியை "மீத்திட" நிலையில் வெற்றிகரமாக மாற்றியுள்ளனர்.
- இந்தப் புதிய நிலையானது, திடப்பொருள்கள் மற்றும் மீத்திரவங்கள் ஆகிய இரண்டின் பண்புகளையும் இணைக்கும் நிலையாகும்.
- பொதுவாக ஆற்றலின் ஒரு பெரு வடிவமாகக் கருதப்படுகின்ற ஒளி ஆனது, தற்போது அசாதாரண பண்புகளைக் கொண்ட ஒரு திட நிலை பொருளாக மாற்றப்பட்டுள்ளது.
- ஒரு மீத்திடப்பொருள் என்பது திட நிலை போன்றக் கடினத்தன்மை மற்றும் உராய்வு இல்லாமல் பாயும் திறன் ஆகிய இரண்டையும் கொண்டுள்ள ஒரு பொருளின் நிலை

ஆகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## நோத்தோபிரான்சியஸ் சில்வாடிகஸ் - ‘கில்லி மீன்’

- கென்ய நாட்டின் காடுகளில் மட்டுமே காணப்படும் ஒரு புதிய வகையான ‘கில்லி மீன்’ இனத்தினை அறிவியலாளர்கள் கண்டறிந்து விவரித்துள்ளனர்.
- ஆனால் இது ஏற்கனவே மிகவும் அருகி வரும் நிலையில் உள்ளது மற்றும் விரைவில் அழிந்து போகக் கூடும்.
- கில்லி மீன் என்பது முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்ற மீன் இனமாகும்.
- அவை முக்கியமாக அமெரிக்கா, தெற்கு ஐரோப்பா, ஆப்பிரிக்காவின் பெரும் பகுதி, மத்தியக் கிழக்கு மற்றும் ஆசியாவின் நன்னீர் அல்லது உவர் நீரில் காணப்படுகின்றன.
- சுமார் 1,270 வகையான கில்லி மீன் இனங்கள் காணப்படுகின்றன.
- அவை பருவகாலத்திற்கு பின் வறண்டு போகும் தற்காலிக குளங்களில் வாழ்கின்றன என்பதால் அவை "வருடாந்திர கில்லிமீன்" என்றும் அழைக்கப்படுகின்றன என்பதோடு அவற்றின் முட்டைகள் அடுத்த மழைக் காலம் வரை வறண்ட சேற்றில் உயிர் வாழும்.





# மாநிலச் செய்திகள்

## தீக்காயங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கொள்கை

- தீக்காயங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனி விரிவான கொள்கையைக் கொண்ட இந்தியாவின் முதல் மாநிலமாக கர்நாடகா மாறியுள்ளது.
- இந்தக் கொள்கையில் காப்பீடு, வீட்டுவசதி, மறுவாழ்வு, வேலைவாய்ப்பு மற்றும் தீக் காயத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் உள்ளிட்ட இன்ன பிற நலன்புரி நடவடிக்கைகள் அடங்கும்.
- தீக்காயம் என்பது முதன்மையாக தீயினால் ஏற்படும் தோல் அல்லது பிற உறுப்புத் திசுக்களில் ஏற்படும் காயம் ஆகும்.
- புற ஊதா கதிர்வீச்சு, கதிரியக்கத் தன்மை, மின்சாரம் அல்லது சில இரசாயனங்கள்

காரணமாக ஏற்படும் தோல் காயங்கள், அத்துடன் கரும் புகையை உள்ளிழுப்பதால் ஏற்படும் சுவாச பாதிப்பு ஆகியவையும் தீக்காயங்களாகக் கருதப்படுகின்றன.




# விளையாட்டுச் செய்திகள்

## உலக குளிர்காலச் சிறப்பு ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் 2025




- இத்தாலி நாட்டின் டூரின் என்ற நகரில் நடைபெற்ற உலக குளிர்காலச் சிறப்பு ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நாளில் இந்தியா 12 பதக்கங்களைப் பெற்றது.
- 8 தங்கம், 18 வெள்ளி மற்றும் 7 வெண்கலப் பதக்கங்கள் உட்பட இந்தியாவின் மொத்தப் பதக்க எண்ணிக்கை 33 ஆகும்.
- பனிச்சறுக்கு மற்றும் மலைச் சரிவு பனிச்சறுக்கு ஆகியப் போட்டிகளில் இந்தியா தலா

10 பதக்கங்களையும் பலகைப் பனிச்சறுக்கு விளையாட்டில் ஆறு பதக்கங்களையும் பெற்றது.

- குறுகிய பாதை வேகச் சறுக்கு, நாடு கடந்த பனிச்சறுக்குப் போட்டி மற்றும் தரைப் பந்து ஆகியப் போட்டிகளில் முறையே நான்கு, இரண்டு மற்றும் ஒரு பதக்கங்களை இந்தியா வென்றது.

# முக்கிய தினங்கள்

## தேசியத் தடுப்பூசி தினம் - மார்ச் 16

- இந்தத் தினமானது, 1995 ஆம் ஆண்டு போலியோ சொட்டு மருந்து வழங்கும் திட்டம் தொடங்கப் பட்டதை நினைவு கூர்கிறது.
- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது 2014 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் தேதியன்று இந்தியாவைப் போலியோ பாதிப்பு இல்லாத நாடாக அறிவித்தது.
- தடுப்பூசி மூலம் தடுக்கக்கூடிய நோய்களை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையான கூட்டு முயற்சிகளை நினைவூட்டும் விதமாக இந்த நாள் செயல்படுகிறது.
- தடுப்பூசி என்பது ஒரு தடுப்பூசி மூலம் உடலில் உள்ள எந்தவொரு நோய்க்கும் எதிராக எதிர்ப்புத் திறனை உருவாக்குவதற்கான முக்கியச் செயல்முறையாகும்.





# இதரச் செய்திகள்

## இந்தியாவின் வீட்டுவசதித் துறையில் நிலவியப் போக்குகள் 2024

- இந்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள ஒரு சட்டப்பூர்வ அமைப்பான தேசிய வீட்டுவசதி வங்கி (NHB) ஆனது, 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் வீட்டுவசதி துறையில் நிலவியப் போக்குகள் மற்றும் முன்னேற்றம் குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 30-09-2024 ஆம் தேதி நிலவரப்படி நிலுவையில் இருந்த தனிநபர் வீட்டுவசதிக் கடன்கள் 33.53 லட்சம் கோடி ரூபாயாகும்.
- இது முந்தைய ஆண்டின் இதே காலக் கட்டத்தை விட 14% வளர்ச்சியைக் காட்டுகிறது.
- இந்தக் கடன் விவரங்கள் ஆனது, பொருளாதார ரீதியாக நலிவடைந்தப் பிரிவினர் (EWS) மற்றும் குறைந்த வருமானக் குழுக்கள் (LIG) ஆகியோர் சுமார் 39% பங்களிப்பைக் கொண்டுள்ளதைக் காட்டுகின்றன.
- இதில் நடுத்தர வருமானக் குழுக்கள் (MIG) 44% பங்கினையும், மேலும் உயர் வருமானக் குழுக்கள் (HIG) 17% பங்கினையும் கொண்டுள்ளன.
- 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முடிவடைந்த காலாண்டில் வீட்டு விலைக்

குறியீடு (NHB-RESIDEX) ஆண்டிற்கு 6.8% அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★